CC. 5/2022 – DATE – 13.11.2025

PW3 – செபாஸ்டியன் ராபர்ட்

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்மந்தமாக நான் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரி. நாங்கள் வாகன தணிக்கை செய்தததாக சொல்லும் இடத்திலிருந்து காவல்நிலையம் சுமார் ஒன்னரை கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரி. அந்த இடம் குடியிருப்பு மற்றும் போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றால் சரி. எதிரி மணல் எடுத்த இடத்தை நாங்கள் போய் பார்க்கவில்லை என்றால் நான் போய் பார்க்கவில்லை. அன்றைய நாள் முழுவதும் நான் காவல் ஆய்வாளருடன் அலுவலில் இருந்தேன் என்றால் சரி.

மணல் யூனிட்டின் மதிப்பு ரூ.3000 என்று எதன் அடிப்படையில் சொல்லி உள்ளேன் என்றால் கொளத்தூரில் அன்றைய தேதியில் இருந்த மணலின் மதிப்பை ஆய்வாளர் விசாரித்தபோது சொன்னேன். வழக்கில் சம்மந்தப்பட்ட வானகத்தின் உரிமையாளர் யார் என்றும், எதிரிக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. நான் சொன்னவாறு அந்த தேதியில் வாகன தணிக்கைக்கு ஆய்வாளருடன் செல்லவில்லை என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டடதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எந்த மணலையும் வாகனத்தையும் என் முன்னிலையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.